
ஓலை 30 | ஓசை 120 | டிசம்பர் 2022

# அகர முதல இலக்கிய பேரவை




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# வாழ்வியலும் வள்ளுவமும்



**நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்**
**இல்லெனினும் ஈதலே நன்று.**

நல்லதுதான் என்று எவரேனும் சொன்னாலும் பிறரிடம் ஒன்றைப் பெறுவது தீமை; ஏதும் இல்லாதவர்க்குக் கொடுப்பதால் விண்ணுலகம் கிடைக்காது என்றாலும் கொடுப்பதே நல்லது.

**Translation:**

Though men declare it heavenward path,
yet to receive is ill;
Though upper heaven were not,
to give is virtue still.

**Explanation:**

To beg is evil, even though it were said that it is a good path (to heaven) To give is good, even though it were said that those who do so cannot obtain heaven.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்


அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001



அகர முதல இலக்கிய பேரவை




Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# கிறிஸ்துமஸ்

மன்னவனும் மாட்டுக் குடிலில் பிறந்தானம்மா
முன்னே சொன்ன மூடம்போக்க பிறந்தானம்மா
பாவம் போக்க பாரினிலே பிறந்தானம்மா
தேவன் மகன் தேடிநம்மில் பிறந்தானம்மா

அன்பை சொல்ல அகிலத்திலே பிறந்தானம்மா
நன்மை யொன்றை நாளும்சொல்ல பிறந்தானம்மா
எல்லோர் பாவம் ஏற்றிடவே பிறந்தானம்மா
பொல்லா வழிதினம் போக்க பிறந்தானம்மா

அன்னைமேரி ஈன்றெடுத்த அன்பு செல்வமே
முன்னேவழி காட்டிச்சென்ற முத்து செல்லமே
நித்தம் நித்தம் நின்னைநாமே புகழ்ந்திடுவோமே
பக்தியுடன் இயேசு பாலகனை துதித்திடுவோமே



கவிஞர் அ.சாந்தி,குறிஞ்சிக்குடி

# அந்தநாள் – மார்கழி 5

## ஞாபகம் நெஞ்சிலே வந்ததே!

குமரப்பருவ மிந்த குமரனுக்கு முடிந்தபோது
குடும்பத்தலைவராம் எந்தை என்னினிய தங்கைக்கும்
எனக்கும் ஒருசேர திருமணம்நடத்த திட்டம்கொண்டார்;
எளியனுக்கு மணம்செய்வதில் அன்றவ்வளவு விருப்பமில்லாயினும்
அன்புதங்கையின் மணம்காண நானுமுட்பட்டேன் மணமகனாக!




எந்தைநினைத்த துவொன்றெனில் என்னீசன்எண்ணம் வேறொன்றாக
வந்ததவளுக்கு மணநாள் முதலாவதாக; என்மனம்மகிழ்ந்தது
அடியேன் மணமெனும் விலங்கிலிருந்து விடுதலைபெற்றதாய்!
வடித்தாரெந்தை தன்கண்ணீரை யொருநாளதி காலைவேளை
பேருந்துநிறுத் தத்தில்பயணம் செய்யகாத்திருந்த வேளையிலே!

காரணம்கேட்டவன் மணம்நான்செய்யா விட்டாலென்னை ஈன்றவர்க்கு
சொர்க்கமின்றி நரகமேகிடைக்கும் என்றகூற்றால் அதிர்ந்தேன்;
எந்தைதுயர் மாற்றமணநாள் மகிழ்ந்தே கண்டேன்!
சிந்தையெனக்கு வந்தது நல்லதொரு குழந்தைவேண்டுமென;
துணையுடன் சேர்ந்திட்ட போதெல்லாம் நல்லதொரு
பிள்ளையெனுக்கு ஆணோபெண்ணோ வாய்த்திடவேண்டுமென
பெருமானை வேண்டும் சிந்தையோடே சேர்ந்திருந்தேன்!

ஆண்டொன்று உருண்டோடும் முன்னேயெனக்கு தன்னைத்தந்தவள்
ஆண்மகனை ஈன்றெடுத்தென் கையில்தந்தாள் மார்கழிஐந்தில்!
எனக்கொருமகன் பிறப்பான் என்னைப்போலிருப் பானெனயெண்ணா
எனக்குப்பிறந்த பிள்ளைகண்டு பேரானந்தம் தானென்றாலும்
என்னவளவனைப் பெறும்முன்பட்ட பாடென்னால்சொல் லிடவியலாது;
குழலினிதுயாழினி தென்பபோலிருபிள் ளைபேறுதவறில் லையாயினும்
குமரனெக்கு குகனென்ற பிள்ளையொன்று போதுமென்றானது!

பெற்றபிள்ளைபெரிய பிள்ளையானதாலே பெரும்பதவிதேடி தன்னினிய
பிறந்தநாடு விட்டுகன்னடா போனானங்கவன் மகிழ்ந்தானோ
துயருற்றானோ யாதுசெய்கிறானறிந் துமறியாதவனாய் வாழ்கிறேனிங்கு!
அயர்வுறுவேன் சிலநேரம்: நல்லதுநடக்குமென நம்புவேன்சிலநேரம்;
இதுவரையிலவன் பட்டபாடெல்லாம் போதுமெந்தனிறை வாயருள்வாய்நீ
இனிவருங்காலம் அவனுக்கொருபொற் காலமாயமைய யெனவேண்டுவனே!

கவிஞர் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# சேமம் புகினும் யாமத் துறங்கு

**பொருண்மையின் பொருளுரை:**
**காவற் கூடத்திலே பணிச் செய்தாலும் நள்ளிரவில் உறங்க வேண்டும்.**

**பா வகை: ஆசிரியத் துறை**

உறக்கம் என்பதோ உடலதன் செல்வமாம்
உணர்வதன் அமைதியும் உறக்கத்தில் இருக்குதாம்
ஊட்டுமே உறக்கமும் ஊட்டச் சத்துதான்
உண்மையும் இதுதான்

உறக்கம் தருமே ஓம்பிடும் ஆற்றலை
உறக்கம் ஒதுக்கிட ஒடுங்கிடும் உடலே
உடலின் வலிமையும் உறக்கத்தில் இருப்பதால்
உடலை பேணிட ஒழுங்காய் உறங்கிடு

சிறகை விரித்து சிறப்பாய் பறக்க
சீரிய உறக்கம் தெளிவினைக் கொடுக்கும்
சேர்ந்த தொழிலது தேர்ந்த காவலோ
தேவைதான் உறக்கம்

அறமாய் உறக்கம் ஆற்றுப் படுத்தும்
ஐயம் கூட அங்கே தெளியும்
ஆழ்மனக் காயத்தின் அருமருந் துறக்கம்
ஆகையால் உறக்கத்தை அழகாய் பேணுக



கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# மனைவியின் மணக்கும் குழம்பு

கைப்பையில் துணிகளையும் காற்றோடு சேர்ந்த பயணத்தையும்
தொடர தயாராகிக் கொண்டிருந்தன கணவனின் நேரங்கள்
போகும் இரயிலில் புசிப்பண இல்லாமல் பசிப்போன தவிப்பின்
இறுக்கமாய் இருப்பாரே என்றெண்ணி மனைவியின் கை வண்ணத்தால்
கடலையை ஊற வைத்து அவித்து உருண்டையாக்கி கருவேப்பிலை
வெங்காயம் சேர்த்து கரைத்துக் கூட்டி செய்தால்
சுவையாக சாதத்தில் ஏற்ற குழம்பினை
விரைந்தும் கொடுத்தால் பெட்டியில் அடைத்து
கண்களில் இடைக்கால பிரிவின் ஏக்கத்தோடு
வெறுமனே கையை ஆட்டினாள்
முன்னமாகவே சென்று உரிய நேரத்தில்
பேருந்தையும் இரயிலையும் பிடித்தான் அவளின் உத்தமன்
அரைமணி நேரம் சென்ற பிறகு
அவனுக்கு அளவாக பசிக்கத் தொடங்கியது
கைகளை கழுவி பெட்டியை திறந்து
அன்னத்தை திண்ண தொடங்கினான்
குழம்போடு சேர்த்து என்ன அதிசயம்
அலையோசை ஆற்றாக வீற்றும் காற்றினிலும்
அவளின் கை பக்குவம் அந்த இரயிலையே ஒரு சுழற்று சுழற்றியது
சக பயணிகள் அருகில் வந்தார்கள்
அவளது கை பக்குவத்தையும் மெச்சினார்கள்
இதுவல்லவோ இல்லாள் சுவையின் நாவால்
கைப்பக்குவத்தால் கன்னாளனை கட்டி இழுத்தாள்.



கவிஞர் ம.இராஜசேகர், ஆக்கூர் மடப்புரம்

# கவிதை

தவறிய வார்த்தைகளில்
சிதறிய முத்துகளாய்
முளைக்கிறது கவிதைகள்.
கடலுக்கும் மனமுண்டு.
நல்ல கவிஞனுக்கு எதை
எடுத்துரைக்கும் குணமுண்டு.
வானுக்கும் எல்லையுண்டு
இயற்கை காட்சிக்கு உணர்வுண்டு.
மௌனத்தின் சக்தியுண்டு.
மொழிகளுக்கும் அழகுண்டு.
காதலுக்கும் கனிவுண்டு.
எளிய நடையில் பிறக்கும் எளிமை கவிதை.
தோன்றும் இடமெல்லாம் பிறக்கும் புதுக்கவிதை.
எதுகை மோனைக்கும் பிறக்கும் மரபுக்கவிதை.
முரணோடு பிறக்கும் ஹைக்கூ கவிதை.



கவிஞர் ச.சத்தியபானு

# புரட்சி!

நெடு நாளைய பழக்க வழக்கம்
சடுதியில் மாறிட விளைவது புரட்சி!

புரட்சியால் பலன் இழப்போர் களம் வெறுக்க.
புரட்சித் தேவை என்போர் களமிறங்குவர்.

முற்போக்கு அறிவு வளர்ந்திடச் செய்திடும் புரட்சி
நற்சிந்தனை உருவாகிடத் தோன்றிடும் புரட்சி

நாட்டில் தோன்றியதோ பலவண்ணப்புரட்சிகள்!
சாட்டை போல் சுழன்றும்
சாதிக்கவில்லை, எதுவும்!

புரட்சிகள் பலவும் புரட்டிப் போடவில்லை!
மக்கள் வாழ்க்கையில் மாற்றம்
காணவில்லை !

சில நாட்கள் மட்டுமே பலரின் நினைவில் ஓடும்.
பல நாட்கள் பஞ்சப் பாட்டையில்
பணத்தின் பின்னால் ஓட்டம்!

சுக வாசிகளோ தான் வாழ்ந்திட
இகபரச் சுகத்திற்காய்
மக்களைத் திசை திருப்பக் கண்துடைப்பு!




புரட்சி என்ற பெயரில்
உண்ணாநோன்பு போராட்டம்!
புரட்டாய் நடித்து கையூட்டிற்குப் பின்
காணாமல் போவர்!

புரட்சிகளின் வினைகள் காலங்கடந்தே
இரட்டிப்பு மகிழ்ச்சியைநல்கிடுமே!

நாட்டின் உயர்வை நினைவில் கொண்டு
நாளும் விழிப்போடு செய்திடும் புரட்சியே
வீரியம் கொண்டு குமுறி வெடிக்கும்.
காரிய வினைகள் வெற்றியை நல்கும்!

கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர்அணை

# பாரியன்பன் நாகராஜன் கவிதை

## பெருநதி
***********

வற்றாப் பெருநதியைக்
கடக்க படகோ, பரிசலோ
எதுவுமே வேண்டாம் எனக்கு.
நதியில் நனையாமலும்,
வெள்ளத்தில் மூழ்காமலும்;
இலகுவாய்க் கடந்து விட்டேன்.
அப்பெருநதியை
இக்குறுங்கவிதையில்.

## நறுமணம்
*************

இரவைத் தின்னும்
பகல் பொழுதில்
கைகோர்த்து நடக்கையில்
உதட்டுச்சாயம் தெறிக்க
என்னிதழ்களைச் சந்தனமென
அள்ளிப் பூசிக்கொள்கிறாய்.
அங்கெங்கும் காதலின்
நறுமணம்!



## சாமரம்
*********

நான் மன்னனில்லை
ஜமீன் வம்சமுமில்லை.
என் களைப்பறிந்து
சாமரம் வீசுகிறது மரங்கள்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# இலக்கணக் காதல்

இலக்கணமும் காதலும் ஒன்று தான்
புரிந்தும் புரியாமல்
அறிந்தும் அறியாமல்
குழம்பிப் போகச் செய்யும் சூத்திரம் அது
அதிகாரங்களுண்டு,
தான் கொண்ட கருத்தை விளக்கும் அதிகாரங்களுண்டு
இங்கும் நெஞ்சம் நிறைந்த நேசத்தை விவரிக்க
அன்பெனும் அதிகாரமுண்டு
விதிகளும் உண்டு
விதிவிலக்குகளும் உண்டு
சொல்லுக்கும் பொருளுக்கும் அர்த்தம் சொல்லும் வேளை
முரணாகிறது சொல்லும் பொருளும்
சொல்லிய சொல்லில் பொருளின்றி
கூறிய பொருளில் மெய்யின்றி
கடைசியில் மௌனமொழியில் தோன்றுகின்றன
முடிவிலா காவியங்கள்
ஐந்திணைகள் இயல்பு மாற
காலம் கரந்த பெயரெச்சமாய்
உறைந்து நிற்கின்றன கடிகார முட்கள்
கள்ளத்தனமறியா மனது கற்கிறது களவியல்
பாங்கனும் பாங்கியும் படாதபாடு பட
தூக்கம் தூரம் சென்ற இரவுகளில்
நெஞ்சு விடு தூதின் தூதுவளாகிறாள் சந்திரப்பெண்
தலைமக்கள் கருத்துரைக்க கூற்றுகள் பலவிருந்தும்
குறிப்பால் உணர்த்த வருகின்றன எண்வகை மெய்ப்பாடுகள்
எது எப்படியோ
இறுதியில் பித்துப்பிடிக்கச் செய்கிறது
உம்மைத்தொகையாய்
இலக்கணக் காதல்.



கவிஞர் கீர்த்தனா பு,பாரதியார் பல்கலைக்கழகம்,பெருந்துறை ஈரோடு

# பேதை தாய்! பித்தாய் அவள்!

எனக்காகவே வாழ்கிறாள்
என் வாழ்க்கையையும் சேர்த்து.

என் கூடவே பயணிக்கிறாள்
என் இருப்பிடத்தையும் பிடுங்கி.

எனக்கான பணிவடைகளையே செய்கிறாள்
என் தேவையையும் அவளே நிர்ணயித்து.



என் சந்ததியை வளர்க்கிறாள்
என் தலையெழுத்தை மாற்றி விட்டு.

எல்லாமும் நான்தான் என சொல்கிறாள்
என்னை முழுவதும் புதைத்து விட்டு.
என்ன ஒரு விந்தை இது!

அவளின்றி ஓர் அணுவும் அசையாது இங்கே.
இல்லை, அசைய முடியாது.

அவளை மீறி ஒரு அங்குலமும் நகராது இங்கே..
இல்லை, நகர முடியாது.

அவளை தாண்டி ஒரு ஆளுமை கிடையாது இங்கே.
இல்லை, உருவாக முடியாது.

பட்டென எல்லாம் புரிந்தது மனதுக்கு!
இருந்தென்ன பயன்? திரும்பி பார்க்கையில்
எல்லாம் முடிந்து போயிருந்தது.

இனி மீண்டென்ன பலன்?
விதி வழியில் இவள் வாழ்வும்.

கவிஞர் மதுகை,திருச்சி

# தனிமையின் காதலன்


தனிமையில் தவித்த நிமிடங்கள்
நரகமாக மாறி
சிகரமாக நின்றது
சீர்குலைத்த சின்னமாய்
சிட்டெரும்பு வண்ணமாய்
ஆற்றிக்கொடுத்த அண்பனாய்
அறுத்துவிட்ட நண்பனாய்
வானுயர்ந்த அருவியில் ஓர்
சொட்டு நீரை ரசிக்கும் குணம்
தனிமையின் அரசன்
மனதை கசக்கி பிழிந்தும்
வார்த்தைகள் இல்லை
கவி காட்சிகள் தோன்றவில்லை
புரியாத புதிர் ஒன்று புதிதாய் மலர
புறம் பேச்சு புதிராய் அமைய
புதிர் பேச்சு புன்னகை கொண்டு
புதிய பாதை அமைந்தது.



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# தமிழ்த் தாய்


குமரியில் தோன்றித் தமிழை ஊன்றி
தமிழ்த்தாய் எனும் பேறு பெற்ற குமரி
ஐம்புலன்கள் எனும் ஐம்பெருங்காப்பியமும்
திருநெற்றித் திலகத்தில் தொல்காப்பியமும்
திருமங்கை ஆடுவது திருவிளையாடல்
திருவாய் பாடிடும் பரிபாடல்
நால்வர்களால் இதய நான்மறைகள்
நாவடி நன்னாக்கு நாலடியார்
திருவடி சேவடியில் சிலம்போசை
திருத்தாள் தேடிவரும் திருக்குறலோசை
முதல்பிள்ளை வள்ளுவன் பெரியவனாம்
சிறுபிள்ளை கம்பன் சிறியவனாம்
"பன்னிரு திருமுறைகள் உயிராக,
பதினெண் கீழ்க்கணக்கை மெய்யாக,
எட்டுத்தொகையை உயிர் மெய்யாக"
என்று படைத்துக் காத்திருந்தாள்
"அன்பை வெளிக்காட்டாக அகநானூறு,
வீரத்தை வழிகாட்ட புறநானூறு "
என்று திருக்கரங்களால் திருப்பாலூட்டினாள்.



கவிஞர் க.ராஜேஷ்,சிதம்பரம்

# அன்பின் தேடல்

காட்டின் அமைதியை
வரமெனப் பெற்ற புத்தன்
வனத்தின் மையத்தில் தியானத்திலிருக்க
இரை தேடித் திரியும் புலியின் விழிகளுக்குள்
பலவீனமடைகிறது கருணையின் ஈரம்.
வயிற்றை நிரப்ப போரிடும்
பசியின் வேட்டைக்குள்
பரிதாபமாகக் கிடக்கிறது
அன்பின் தேடல்.



கவிஞர் இளையவன் சிவா

# (ஏ)மாற்றம்

காலில் அடிப்பட்டு
தெருவில் கிடந்த
அந்த நாய்க்குட்டியை
எடுத்துக் கொண்டு
தனது இரும்புக் கடைக்கு
கொண்டு வந்து
காயத்தைக் கட்டி
மருந்துக் கொடுத்து
வளர்த்து நாயாக்கினார்
அந்த கடைக்காரர்,
இரவு வரும் நண்பர்களால்
தினமும் புரோட்டாவால்
கவனிக்கப் பட்டது
இந்த நாயும், நாளடைவில்
கோழிக்கறி குருமாவுக்கு
அடிமையானது
கறியை தான் சாப்பிட்டாலும்
புரோட்டா, குருமாவை
நாய்க்குதான் கொடுத்தார் கடைக்காரர்
கொரோனா ஊரடங்கில்
கடையடைப்பில்
நாய்க்குக் கிடைக்க வேண்டிய
புரோட்டாக் கொடுக்க
வசதியில்லாததால்
பிஸ்கட்டும், சைவ சோறும் கொடுக்க
நாய் உண்ண மறுக்கிறது.



என்னச் செய்வதென்று தெரியாமல்
திகைத்தக் கடைக்காரர்
அரிசி சாக்கில்
தண்ணீர் தெளித்து அதனுள்
நாயை போட்டுக்கட்டி
ஊரின் ஒதுக்குப் புரமான
இடத்தில் கொண்டு
போய் விட்டுவிட்டார்.
இப்போ கடைக்கு
வரும் வாடிக்கையாளர்
யாராவது
காவலுக்கு ஒரு நாய்
வளர்க்கலாமுங்கன்னுக்
கேட்டா சொல்லுகிறார்
ஒரு நாயும் வேண்டாமுங்கன்னு.

கவிஞர் இரா.மதிராஜ்,அலப்பட்சக் கவுண்டன் புதூர்

# பிரிவின் காதல்

செழிப்பாய் இருந்தவள்
புன்முறுவளோ.
வற்றிய நதியாய்
மணல் படிய.


நாமென்று உரைத்த குரலோ.
நானென்று உரைக்க அகம் வருந்த.
உன் பிரிதலில் காரிகை இவளும்
கனிந்த சிவந்த
வதனம் வெளிப்புறமாய்.

அகம் கனல்விட
வனமாய் மாறிய
வீடும் சுற்றமும்
அவள் கதி உணர்வாயோ?

அன்றாடம் நான் பார்த்த
என்னவன் நகைப்பை
இனி எந்நாளில்
காண்பேனோ?

உன் பிரிதலை
நான் வெறுப்பினும்.
நின் பிரிதலில்
நம் காதல் வழுவாகுதோ!

வசந்த வாசம் வீசிட
சின்ன சின்ன சிரிப்பும்
எட்டி தான் பார்க்குதோ.
என்னவன் நினைப்பிலே.



நித்திரையும் கைவசமின்றி
கணம் கரைந்திடா
கரையோர மணலாய்
ஓரமாய் நின்றும்

காதல் ரசனையிலே
நாழிகை கடக்க.
பகலவன் உதிக்கும் மணிகளை
கண்களோடு பதித்த காத்திருப்பு.

விடுதலை தர வாராயோ?
விழிகளுக்கும்.
உன்னவளின் துயிலற்ற
நினைவிற்கும்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# கொடுத்துப் பெறு

அகிலம் ஆண்டவனின்
அற்புத படைப்பு
அதில் அன்பு ஒன்றே
அகிலத்தின் மையக் கருத்து
அன்பு ஆண்டவன் அளித்த பரிசு
அதை வேண்டாதோர் அகிலத்தில் அரிது
அறப்போர் தராத அக மகிழ்வையும்
அன்பால் ஜெயித்து அடைந்திட முடியும்
அனைத்து உயிரும் அடைய நினைப்பது
அன்பு ஒன்றை தான்
அன்பு இல்லையேல்
அகிலம் கூட வெற்று கிண்ணம்தான்
அன்பு கொண்ட சக்தி
அகிலத்திடம் இல்லை
அதனாலோ என்னவோ அகிலம் கூட
அடிமையானது அன்பின் அரவணைப்பில்
அகிலமே அடிமையான பின்
அதில் வாழும் நாம் எம்மாத்திரம்
அன்பை பகிர்வோம் அன்புடன் வாழ்வோம்
அன்பான உலகம் ஒன்றை அன்பாலே அமைப்போம்
அனைவரும் வாரீர்



கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# ஒப்புரவறிதல்

## அதிகாரம் : 22

எதிர்பார்ப்பு இல்லாது
இல்லார்க்கு உதவுதலே.
எப்பொழுதும் மனம்நிறைந்த
ஒப்புரவறிதல் பண்பாம்.

கைமாறு கருதாமல்
மண்வீழும் மழைபோல்.
பலன் எதிர்பாராது
உதவிடல் உயர்வாம்.

முயன்று உழைத்து
ஈட்டிய பொருளையெல்லாம்.
இயன்ற வரையில்
எல்லார்க்கும் உதவணுமே.

உதவுதலெனும் ஒப்புரவை
போலொரு அறப்பண்பை.
இவ்வுலகிலும் வானுலகிலும்
பெறுதல் அரிதே.

இவ்வுலகின் கடனாம்
ஒப்புரவறிந்தவன் வாழ்வான்.
அறியாதான் இவ்வுலகில்
செத்தாருள் வைக்கப்படுவான்.

பிறர்க்குதவும் பேரறிவாளனின்
மதிப்புடைய செல்வம்.
நீரெடுக்கும் குடிநீர்குளம்
நிறைந்து பெருகுமாப்போன்றதே.




ஒப்புரவு ஒழுகுவானிடம்
உண்டாகும் செல்வம்.
ஊர்நடுவின் பழமரம்
கனிநிறைந்து குலுங்குமாப்போன்றதே.

உதவிடும் மனிதரிடம்
சேரும் செல்வம்.
பிணிகளுக்கு மருந்தாகும்
மருத்துவமரம் போன்றதே.

ஒப்புரவு அறிந்தோர்தம்
வறுமையின் காலத்தும்.
இயன்றவரை பிறர்க்கு
உதவிடத் தவறிடாரே.

உதவுவதால் பொருட்கேடு
வருமென்றால் அக்கேட்டை.
தனைவிற்றும் ஒருவன்
வாங்கிடல் தகுதியே!

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# தோற்கவும் கற்றுக்கொள்

தோல்வி என்பதை சிந்திக்கவே கசக்கும்
விடாமுயற்சி செய்து தோல்வியை விரட்டிடலாம்
சில நேரங்களில் தோல்விதான் பலப்படுத்தும்
பல நேரங்களில் பாடங்களும் கற்றுத்தரும்

தோற்பது தவறில்லை திரும்பவும் வெற்றி பெறலாம்
தைரியம் நிறைந்தவனே தோல்வியை ஏற்கிறான்
கோழையோ உடைந்து நொறுங்கி போகிறான்
வெற்றியே குறிகோளாகட்டும் தோல்வியையும் எதிர்கொள்வோம்

பெரிதான வெற்றியடைய சரியான முயற்சியே தோல்வி
துவண்டு விட நீ கீரைக்கட்டு இல்லை
மார்பில் விழுப்புண் பெற்ற வீரப்பரம்பரை
தோற்கவும் கற்றுக்கொள் அனுபவம் பிறக்கும்



யாரிடம் தோற்கிறோம் என்பதில் கவனமாயிரு
அன்பான அனைவரிடமும் தோற்றுப் போ
அன்பு உன்னை உயர்த்திக் காட்டும்
எளிவரிடம் தோற்றுப்போ வெற்றி பெற்றதாய் சந்தோஷப்படட்டும்

சிறுபிள்ளைகளிடம் தோற்றுப்போ சிரித்து சிலாகிக்கட்டும்
உன்னை காயப்படுத்தினாலும் உன் உயிராவனி( ளி) டம் தோற்றுப்போ
உன்னை வென்றதாய் வீராப்பு கொள்ளமாட்டான்(ள்)
உன் வெற்றிக்கு பின் உன்னவனே(ளே) இருக்கிறான்

உன் கண்ணில் நீர் வழிந்தால் துடிதுடிப்பவரிடம்
நெஞ்சம் பதைப்பவரிடம் தோற்றுக்கொண்டேயிரு
சகோதரனை வீழ்த்துவது எல்லாம் வெற்றியா?
சாதனை என்பதே ஜெயிப்பதென்று யார் சொன்னது?

அசோகரிடம் கேள் வெற்றியா வீரத்தின் அடையாளமென?
கலிங்கப் போரின் வெற்றியே துயருக்கு காரணம் என்பான்
புத்தரிடம் கேள் ஆசையிடம் மட்டும் வெற்றிபெறு என்பான்
வெற்றியும் சிலவேளை வேதனை தரலாம்

தோற்பதும் சுகமே! தோள் சாயும் நேரம்
விழி நீர் துடைக்க அன்பான கரங்கள் இருந்தால்.

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# பட்டதாரி

பல்கலைக்கழகம் வாழ்வில்
படிப்புக்கு கிடைத்த அங்கீகாரம்
பட்டதாரி எனும் நாமம்.

பட்டத்தை மட்டும் வைத்து கொண்டும்
சட்டத்தை மதிக்க தெரியா
பட்டதாரிகளே இங்கே கோடி.

படித்தால் நீ ஜானி என்றால்
படித்த பின்னும் வேலை இல்லாமல்
சுற்றி திரிகையில் சிறக்கிறது
உன் பட்டதாரி எனும் உலக நாமம்.



கவிஞர் சஸ்னா ஹசீன் இலங்கை (புத்தளம்)

# மரம் போல் மனங்கொள்

மரம் போல் உள்ளம் கொண்டிடு
அதன் நலவுகளை எடுத்து நட
அதனால் விளைந்திடும் நல்லவை உனக்கு
அதனை அறிந்தால் விடாமல் ஏற்றிடுவாய்



கிளைகளை முறித்தாலும் மகிழ்ச்சியோடு ஏற்றிட்டே
துளிர் விட்டு மீண்டும் எழுந்திடுமே
வஞ்சிப்போர் வஞ்சித்தாலும் மரம் போல்
நல்லதை மட்டும் பரிசாக கொடுத்திடுவாய்

வஞ்சிப்போர் முன் துளிர்விட்டு வென்றிடுவாயே
கடின பேச்சால் மனம் வலித்தாலுமே
கனிபோல் பேச்சால் உள்ளங்களை வெல்வாயே
காய்ந்த இலைகள் கவலை கொள்வதில்லையே

காய்ந்த பின்பும் உரமாய் மாறிடுமே
அனைத்தையும் இழந்த போதிலும் நீ
கஷ்டங்களை துரத்தி உரமாய் மீண்டெழுவாயே
முயற்சித்தால் முடியும் என்பதை அறிவாயோ

கிளைகளாய் உறவுகளோடு ஒன்றாய் இணைவாயோ
வேர்களாய் உறுதி கொண்டு சாதிப்பீரோ
மரம் போல் உதவிகளை செய்வீரோ
மறந்தும் அதனை சொல்லிக்காட்டிடாது இருப்பீரோ

கவிஞர் ஜஸீரா ஜலீல்,மலேசியா

# உள்ளே ஓர் குரல்



கரையில்
நின்று
அலைகள்
பிடிக்கும்
மாவீரன்
நான்
ஆழம்
நகைத்துச்
செல்கிறது.

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# தன்முனை வைரங்கள்

வெற்றிலை பாய்கிறது
வீட்டின் சுவற்றில்
சிவக்க வைக்க அம்மா
சுருக்கு பையுடன் இல்லை

*

உயரமான மரங்களெல்லாம்
புன்னகைக்கிறது குனிந்து
குனிந்த தலை நிமிராமல்
செல்லும் என்னைக்கண்டு

*

இன்றொரு பொம்மை
நாளையொரு பொம்மை
சாவி கொடுக்காமலே
நடைபோடுகிறது வாழ்க்கை

*

ஒரு தம்ளர் முழுவதும்
நீர் வேண்டி காத்திருப்பு
தாகத்தின் தேவைகளை
முதல் துளியே அறிகின்றன

*

சதுரங்க பெட்டிகளில்
சிப்பாய்களும் இராஜாக்கள் தான்
வென்றாலும் தோற்றாலும்
தன்னை மீறிதானே இரண்டும்



கவிஞர் சே கார்கவி,நாகப்பட்டினம்

# கானலாகிய காதல்

நானும் அவளும் உயிருக்கு உயிராய் காதலிக்க
என் காதலை அவள் ஏற்றுக் கொள்ளவில்லை
அறியா என் மனம் தடுமாற தூது செல்ல நினைத்தேன்
தங்கையிடம் சொல்ல அவளோ தடுமறினாள்
நீயே சொல் என்றாள் நானும் சென்றேன்
நேருக்கு நேர் செல்கையில் கண்கள் நடனமாட
மௌனமாய் நின்றாள் அவளின் பெயர் பொறித்த
எழுதுக் கோலை கொடுக்க வாங்கவில்லை
மனம் உடைந்தேன் நெஞ்சில் பாரத்தொடு நடந்தேன்
எத்தனை நாட்கள் அவளுக்காக காத்திருப்பது
காத்திருந்து எனது கண்ணும் காணாமல் போனதே
அவள் மனதில் காதலை சொல்ல முடியாத பயம் என அறிந்தேன்
தினமும் அவள் பின்னே செல்கிறேன்
கனவிலும் அவளது நினைவுகள் வந்துப் போயின
கானல் நீர் தெளிந்ததைப் போல எனது காதலும் தெளியும்
என்ற நம்பிக்கையில் எழுதுக் கோலை வைத்துக் கொண்டே இருக்கிறேன்
என்றாவது ஒரு நாள் என்னிடம் சொல்வாள்
அந்த நாளுக்காக காத்திருக்கிறேன்



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# மரம் போல் மனம் கொள்

விடா முயற்சியை வித்திடம் கேட்டுப்பார்
மண்ணோடும் விண்ணோடும் போராடிய கதை கூறும்
வீரியத்  தன்மை இல்லாமல் முளைப்பேது?
தொடர் முயற்சி மட்டுமே, களைப்பேது?
குப்பைகளை வீசினாலும் உரமாகவே ஏற்கும்
மானிடா மற்றவர்கள் விமர்சனங்களை உரமாக ஏற்றுக் கொள்
உன்னை தரமாக்கவே வழி வகுக்கும்
ஒரு காட்டிற்கான வீரியமே ,சிறிய
விதைக்குள் அடங்கி இருப்பதை அறிவோம்
விதை கீழ்நோக்கி விழுந்ததற்காக அழுததில்லை
பாதை ஏற்படுத்தி மேல் நோக்கி எழுவதற்கே
சிதைந்த பிறகு புதிய கோணம் வருகிறது
தன்னை வெட்டியவர்க்கும் காய்கனி கொடுக்கிறது
இன்பத்தை பல மடங்காக்கி தந்து மகிழ்கிறது
உயிர்வலி தரினும் தாய் உள்ளத்தோடு
உயிர் வளி தந்து சுவாசிக்க வைக்கிறது
கல்லால் அடித்தாலும் கனியைக் கொடுக்கிறது
மனித மனமே துன்பங்களால் மரணிக்காதே
மாற்றார் விமர்சனங்களை அடியுரமாக ஏற்றுப் பயணிப்போம்
புனிதனாய் மாறி இன்பங்களாய் ஏற்றிடு
பின்னர் பூக்கலாம் என செடிகள் ஓய்வெடுப்பதில்லை
உரிய காலத்தை உனதாக மாற்றிடு



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# அரிதாரம்

ஆண்டாண்டு காலமாய்
அரிதாரம்பூசி அபிநயிப்போர்
அடிபற்றி நடப்பதே
அநேகர் வாடிக்கை
பெற்றோரை போற்றிடவும்
பெரியோரை பணிந்திடவும்
பண்போடு வாழ்ந்திடவும
படிப்பித்தக் காலமது
வறுமையைக் கண்டு
பயந்து விடாதே எனவும்
மனிதன் தெய்வமாகலாமென
விலை கொடுத்தாலும்
தாயன்புக்கடையிலில்லையென
உன்னத தத்துவம் உரைத்தனர்
எவன்டி உன்னைப் பெத்தான்?
அடிடாஅவளை வெட்டுடா என
அடாவடியை கற்பிப்பது இன்று
இல்லற வாழ்வையும்
இலைமறை. காய்மறையாக
இலக்கியமாக சொன்னது போய்
எதார்த்தம் எனும் பெயரில்
எத்தனை அபத்தங்கள் இன்று?
கணினியில் அறிந்திடாதக்
கயமைகளையும் படம்போட்டுக்
கற்பித்தலும் முறையோ?



அறியாப்பிள்ளைகளையும்
அனர்த்தமாகப் பேச, பாடவைத்து
அந்த நடிகர் பேசியதும் பாடியதும்
அப்படித்தானே எனநஞ்சினை
அவர்தம் வாழ்வில் கலப்பதேனோ?
பணம் சம்பாதிப்பதோடு சிறிது
பண்பாட்டையும் பரப்பிடுவீர்
பொறுப்பிலிருப்போரே.

கவிஞர் ஷீலாதேவி அருணாசலம், நாகர்கோவில்

# நம்பிக்கை

அன்புடன்
ஆதரவும் உன்னதமாய் கொடுத்து!

இன்பத்தையும் இன்னிசை போல் முகம் மலர அருளி!



ஈகையையும்
உள்ளூர அன்புடன் ஊட்டி!

ஊறு விளைவித்திடா
எண்ணத்துடன்
ஏகாந்தமாய் வாழ்ந்து!

ஐயம் களைந்து
ஒற்றுமை உணர்வுடனே
ஓங்காரமதை உணர்ந்து!

ஔடம்பரம் நிறைந்திட்ட நீராய் வாழவே
அஃதே ஆவல் கொள்ளுது நல்மனமுமே!

என்றாவது ஒருநாள் நன்றே நடந்திடும் எனும்
நம்பிக்கையில் காத்திருப்போம் நாமுமே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# பொருளாதாரம்

ஒட்டடை போர்வை போர்த்தி
ஆகாயப்பரணில் உறங்கும்
ஒற்றைரூபாய் சொல்லும் - பொருளாதாரம்

வண்டி இழுத்தகாசில் வயிறும் நிறைந்தது
வாழ்க்கையில் வறுமை இல்லாது வாழ்ந்துபோகவும் வக்குஇருந்தது
முறுக்கிப்பெற்ற காசை முந்தானையில் முடிந்துவைக்கவும் போதுதில்லை
வக்கோடு வாழ்ந்திடவும் எழவில்லை

ஒருகிலோமாவு அதில் ஒன்பது ரொட்டி சுட்டான்
ஒருரொட்டி அதிலே அவன் ஒருகிலோ மாவுபெற்றான்
விலையேற்றம் வறுமையின் தாயானது
குடியோரின் கண்ணீர் வறுமையின் உருவானது
வறுமையில் உருவானது



டிஜிட்டல் தராசில் பொருள் எடை நிறுக்கப்படுது
நிறுத்தப்படும் பொருளின் விலையேற்றத்தால்
மக்களின் வாழ்வு இறுக்கப்படுது
இலையில் வற்றிப்போன ஈரம்செழிப்பின் அடையாளம் காட்டுமோ
ஒட்டிப்போன மக்களின் வயிறு
வறுமை நடந்துபோன பாதையின் அடையாளம் சொல்லுமோ

பல்லிமிட்டாய் வாங்கித் தந்த ஒற்றைரூபாய்
இப்போ பரணிலே படுத்துக்கிடக்கு
மக்களுக்குப் பயனில்லா பொருளாதார திட்டம் - இப்போ
பார்வையாளனாய் உட்கார்ந்திருக்கு

கவிஞர் ஹஸன் முஹம்மது பஜீத்,கல்முனைக்குடி,இலங்கை

# ஒரு துளி ஈரம்

என்னிடம் இருந்து
என்ன வேண்டும்
என்றாலும்
எடுத்துக் கொள்ளுங்கள்
என் முட்களை
அதிகரியுங்கள்
என் பூக்களைக்
கவர்ந்து செல்லுங்கள்
என் பூமியைக்
கொத்துங்கள்
என் பாதையைச்
சிதிலமாக்குங்கள்
என் உழைப்பை
உறிஞ்சுங்கள்
என் மொட்டுக்களை
நீங்கள் சூடி
தமனி எடுங்கள்
நான் பொறுமையோடு
போகிறேன்
பூமியின் தொலைவில்
ஒளிப்புள்ளி தேடி
வானத்தை நோக்கி
ஒரு வால்வெள்ளி தேடி
வானம் பூமி யாவும்
வார்த்தவனிடம்
ஒரு துளி ஈரம்
ஒரு துளி நிழல்
வரமாகப் பெறும்
வசமாக
நிழலாகும் நம்பிக்கையில்
என் பயணம்
தொடரியில்.



கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# புத்தக அலமாரி

கருவைத் தாங்கி நிற்கும் கருவறை!
பொதிந்து வைத்த பொக்கிஷத்திற்கு
ஊனும் உயிரும் கொடுத்து
உணர்வோடு கலந்து நிற்கும்
தாய்க்கு சமமானது!
ஊட்டதோடு அறிவும் கொடுத்து
வாழ்வியலில் தெளிவு தரும்!
விதவிதமான நல் எண்ணங்களை
வரிவடிவம் கொடுத்து எண்ணற்ற
புத்தகங்களாய் தன்னில் சுமந்து
உயர்வுற வைக்கும்!
நாள்பட்ட அலமாரியோ?
நசுங்கிப் போன அலுமினிய பெட்டியோ?
சுமந்திருக்கும் புத்தகங்களின்
அருமை பெருமைகளை அறியாது!
நம்மைப் படிக்க வைத்து
உயர்த்தி அழகு பார்த்திடும்
புத்தக அலமாரி!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.73

# குறைகளும் குறையும்!

குறை சொல்ல கைகூப்பிடும் தெய்வமும்
கூப்பிட்ட கூக்குரலுக்கு செவிசாய்க்காவிட்டால்
வணங்கி வரம் தந்து வாழ்வு தரும்.

கும்பிடும் தெய்வத்தையும் குறை சொல்ல
சாபம் தரும் சாபக்கேடானவன்.

குற்றம் குறைகள் கோள்சொல்லில்
கோவில் போல உள்ளமதை
குட்டை போல குழப்பிவிட்டு
மீன்களை முதலைகள் பிடிக்கிறது.

தான் செய்த குறையறியான்
குடிமக்களை ஆள்பவன்.

அடுத்த கட்சி ஆட்சிக்கு வந்தால்
அதே குறையால் குதறிவிடுவான்.



குறைவான மதிப்புள்ள பூச்சியமும்
முழு மதிப்புள்ள எண் ஒன்றில் பக்கத்தில்
புகுத்தி விட்டால் பூர்த்தியாகும்.

குறை நிறையில்லா குடிமகன்
எவருமில்லை எவனொருவன்
எது குறையோ அதை நிறையாக்கி
முயற்சிதனை முன்னிருத்தினால்
அவனே முதல்வன்.

குறைமதியும் முழுமதியாம் பௌர்ணமியில்.

கவிஞர் நிலா சுபாஷ், ஆக்கூர்

# இறந்தும் துடிக்கின்ற இதயம்

இறுதி மூச்சை
ஒரு முறை
உள்ளே இழுத்து
வெளியே விட்டேன்.
மூச்சடங்கிப் போனது.
கண்களை மூடிவிட்டேன்.
உணர்ச்சியற்ற உடலானேன்.
உன் அழு குரல் மட்டும்
என் காதோரம் ஒலிக்கின்றது.
உன்னைத் தழுவ
உள்ளம் ஊசலாடுகிறது.
கண்களைத் துடைக்க
கைகள் ஏங்குகிறது.
ஆறுதல் சொல்ல
வார்த்தை அவதிப்படுகிறது.
எதுவும் செய்ய
இயலவில்லை.
உள்ளே குமுறுகிறேன்.
புரிகிறது
மரணித்து விட்டேன் என்பது;
இருந்தாலும்
இறந்தும்
என் இதயம்
உன்னுள் துடிக்கின்றது.



பிறவிக்கு தான்
பிரிவேயன்றி
புனித காதலுக்கு இல்லை.

கவிஞர் சன்ஹா நிஜாம்,இலங்கை.(புத்தளம்)

# எந்தன் நேசமே

ஓட முடியா தூரத்தில்
நான் உந்தன் இதயத்தில்
பதுங்கியுள்ளேன்,
காற்றிருந்தும் விலை
கேட்டேன் உந்தன்
நெஞ்சினில் இருப்பதால்,
விலை கேக்க நீயோ
காரணம் சொன்னாய்
என் சுவாசம் நீ
ஆயுளும் கடந்து விடென்று.
உந்தன் முகம்
கண்டு உந்தன்
நெஞ்சம் சாய்ந்தே
எனக்காய் துடிக்கும்
நொடிகளை கேட்பதே
எந்தன் ஆயுள் என்பேன்.



கவிஞர் கவின்யா,பழனி

# என்னை காப்பாற்றுவது என்கவிதை

என்னைகாப்பாற்றுவது என் கவிதை
என் கற்பனையின் உள்ளே இருக்குது இதன் விதை
தினம் தினம் என்னிடம் மனதில் பேசும்
மௌன கவிதையை அது வீசும்



அலைபாயும் மனதை அது அடக்கும்
கலைமகள் இதிலே தினம் தரும் பாடம்
அலை போல் எழும் என் கவியும்
கரை காகித தரையினிலே வந்து முட்டும்

என் நிலை என்றும் அதன் வசம் .
என்றும் இது தரும் காதல் கவி வசந்தம்
என்னவள் மறைந்ததை அது குறைக்கும்
அந்த எண்ணமே கவிதையாய் தினம் வாழும்

எல்லாம் இதனால் மறைகிறது இதில்
என்னுள் கவிதை சுரக்கிறது
நல்ல எண்ணம்அங்கு விதைத்ததாலே
அவள் துணை அருள் கவியை தருகுது

கலைமகள் போலே அவள் இருக்க தினமும் காலையில் அவளும்
காற்றாய்வந்துஎனை எழுப்ப !
கற்பனையில் எழுத!
வைக்கிறாள் கவியை
அற்புத சொற்களை
அள்ளியே தருகிறாள்

என்னுள் அவளின்
ராசாங்கம் தினம்
என்றும் அவளே என் சுவாசம்
நன்றே பாடுவேனே நான் அவள் தயவில்
நான் இன்னும் கலைமகளாய் காண்கிறேன் அந்த வடிவில்

கவிஞர் அஞ்சல் தஞ்சை தாசன்,மடிப்பாக்கம் 91

# காதல் நோய்

பட்டாம்பூச்சியின்
மெல்லிய சிறகுகளின் அசைவுகள்
உலகில் ஏதோ ஒரு மூலையில்
புயல் உருவாக காரணமாக இருக்கிறதாம்
இதனை பட்டாம்பூச்சியின் இயக்கம் என்கிறார்கள்
அறிவியல் அறிஞர்கள்,
பட்டாம்பூச்சியின் மெல்லிய சிறகுகளின் அசைவிற்கு
அப்படியானால் என் அருகிலே இருந்து
என் அணுவெல்லாம் புகுந்து
என்னை ஆட்டி வைக்கும்
உன் மீது காதல் வராதா என்ன?



அவள் பெரிய தந்திரகாரி
சூறாவளியையும் வடிகட்டி
தென்றலாக்கும் பக்குவம் கொண்டவள்,
மருதாணி போட்டால் கை சிவக்குமாம்
நாம் அறிந்த உண்மை.
அவள் தொடுகிறாள் மருதாணியை சிவக்கிறது
இது நான் அறிந்த உண்மை.

யானைக்கு அடி சறுக்குமாம்
நான் என்ன செய்வேன் மனித பூச்சி!

அவள் கண்ணாடியில்
சிக்கி தடுமாறி தவித்துக் கொண்டிருக்கிறேன்
காதலால்.

கவிஞர் ஆரூர். சிவ. மணிவேல்

# கோபம்

கோபம் அதிகம்
ஆனால் கொள்ளை
அன்பும் அதிகம்
பாசமும் அதிகம்
ஆனால் பரிதவிப்பும்
அதிகம் அன்பே
நேசம் அதிகம்
ஆனால் பதட்டம்
காதலும் அதிகம்
கரைந்திடும் உள்ளமும்
அதிகம் கண்ணே
கண்ணீரும் அதிகம்
இளகிடும் மனமும் அதிகம்.



கவிஞர் ஜெயா ஸ்ரீ,லண்டன்

# மரம் போல் மனங்கொள்

பச்சை மரங்கள் மட்டும் உதவுவதில்லை
பட்ட மரங்களும் நமக்கு உதவுமே
மானிடனே!
வாழை போல் வாழு

மரத்தின் ஆணிவேர் போல
நமது பெற்றோர்களும் பெரியவர்களும்
என்பதை மனதில் நிறுத்து

இவர்களை இதயத்தில் வைக்காவிடினும்
இல்லத்தில் வை
முதியோர் இல்லத்தில் அல்ல

பச்சை மரங்கள் போல
உன் வாழ்வும் பசுமையாக
மரம் போல் மனங்கொள் மனிதனே



வேம்பு போல அருமருந்தாய்
உதவிடு மனிதனே

பனை போல உயர்ந்தாலும்
பதனீர் போல பயன்படு

தென்னை போல தாகத்தை தீர்

ஆல் போல தழைத்தோங்கு

மரம் போனால் மழை போச்சு
மனம் போனால் மனிதநேயம் போகுமே

அண்டி வரும் அனைவரையும்
ஆதரிக்கும் மரம் போல் மனங்கொள் மனிதனே.

கவிஞர் சுமதி தசதரன்,சென்னை

# அடைபடாத மாது

மனித சமுதாயமே
மனிதத்துவம் இழப்பதா

பெண்ணின் கருவூலத்தில்
விருட்சமாய் படர்ந்த

அதிசயக் கோட்டையை
அசைத்துப் பார்க்காதே

பாவையின் குணத்தை
வேதையாய் மாற்றாதே

பிணைக்கொண்ட சங்கிலியை
துணைக்கொண்டு அகற்ற

ஒப்பற்ற மாதராய்
ஒப்பில்லாமல் நிலைக்க

திமிறிய கூட்டத்தை
தீயாய் எரிக்க

மீண்டும் பிறந்திடு
தரணியை ஆண்டிடு



கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# பெண் என்பவள்

இல்லத்தின் இனியவள்
இன்பத்தின் ரதியவள்
கல்லமில்லா மனம்
களிபோடு கொண்டவள்



மெய்யோடு உருகிடும்
மெழுகுவர்த்தி ஆனவள்
பொய்யில்லாப் பூவையாய்
பொன்னான பாவையிவள்

ஆதவனாய் ஓயாது
அல்லும்பகலும் உழைப்பவள்
இதயமும் இளகி
இரங்கிடும் இறையவள்

வன்மத்தைத் தகர்த்து
வாழவும் வைப்பவள்
கண்ணாக இருந்து
கடைசிவரை காப்பவள்

வலிகளை மறைத்து
வசந்தம் தருபவள்
பழிகளை அகற்றி
பாசம் கொடுப்பவள்

வானத்து நிலவாய்
வளர்ந்து தேய்பவள்
கானகத்துக் குயிலாய்
கனிவாய் பேசுபவள்

குடும்பத்தில் ஒளியேற்றும்
குத்துவிளக்கான சுடரவள்
அடுக்களை கதியாய்
அனைத்தும் செய்பவள்

அன்பின் இலக்கியமாய்
அகிலத்தை ஆள்பவள்
துன்பத்தைப் போக்கி
துணிவை அளிப்பவள்

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# தன்முனைக் கவிதை

நரகஉலகத்தில் செய்யும்
நற்செயல் மனிதனாக்குமே!
நமக்குள் துளிர்விடும்
நல்லெண்ணம் நல்லோராக்குமே!

மலைத்து நின்றால்
மணல்மேடும் மலையாகுமே!
முயன்று துணிந்தால்
முட்பாதையும் வரலாறாகுமே!

புரிந்து நடத்தல்
பிரியத்தைப் பெருக்கும்
புரியாதாய் நடித்தல்
பிரிவைப் பரிசளிக்கும்



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்

# உங்கள் மேடை

உங்கள் மேடை
உங்கள் நாக்கு
எங்கள் பாரதி பாட்டை
எப்படியும் பறையுங்கள்

உங்கள் மேடை
உங்கள் ஒலிவாங்கி
தமிழை என்றும்
தவறாகவே உச்சரியுங்கள்

உங்கள் மேடை
உங்கள் நேரம்
காகித்தத்தில் உள்ளவற்றை
அவ்வாறே கக்குங்கள்

உங்கள் மேடை
உங்கள் மலர்
எப்படி வேண்டுமானாலும்
மலர வையுங்கள்

உங்கள் மேடை
உங்கள் இருக்கை
யாரை வேண்டுமானாலும்
அமர்த்துங்கள்



உங்கள் மேடை
உங்கள் நாடகம்
எதை வேண்டுமானாலும்
நிகழ்த்துங்கள்

ஆனால்,

காலம் உங்களை
கழுவேற்றும் காலம்
வெகு தொலைவில்
இல்லை

என்பது மட்டும்
நினைவில்
இருக்கட்டும்

கவிஞர் மதுரகவி,மதுரை

# எங்கள் வீடு

அனுதினமும்
எங்கள் வீட்டு ஜன்னல் கதவை தட்டி
எங்கே எனக்கான
உணவு என்று
கேட்கும் பறவைகளுக்காகவே
வைத்திருக்கிறேன்
ரேஷன் கடை அரிசியும் கோதுமையும்!



கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# அறம்




கவிஞர் அனல் நிலவன்,கொசவபட்டி

# மார்கழி மாதம்

ஆஹா! மாதங்களில் குளிர்ச்சியும்
தெய்வீக தன்மையும் ஒருங்கே கொண்ட மார்கழி
மாதமே வருக வருகவே!
மாதங்களில் நான் மார்கழியாக
இருப்பேன், என்று கீதையில் சொன்ன பரமாத்மா
மரங்களில் நான் அரசமரமாகவும் இருப்பேன்.
பிரம்ம முகூர்த்த வேளை என்று சொல்லப்படும்
விடியற்காலை ஓசோன் மண்டலம், நம்மை
தூய்மை படுத்தி, மனமும்,உடலும் புத்துணர்ச்சியே!
தேவர்களின் ஒரு காலை பொழுது தான்
நமக்கு மார்கழி முப்பதும்,
ஆண்டாள் நாச்சியார் மார்கழி மாதம்
முப்பதும் பாசுரங்களைப் பாடி
தோழியரை விடியற் பொழுதில் எழுப்பி
அந்த கோவிந்தனை சேவிக்க வைத்தும்
மாணிக்க வாசகப் பெருமான்
சிவ பெருமானை ஆதியும்,அந்தமும் பாடி அந்த
ஆண்டவனையே குளிரச் செய்தவரே!
எந்த மங்களகரமான செயல்களையும்
செய்யாமல் ஆண்டவனையே மனதில்
அதாவது பீடமாக அமைத்து
வழிபடுதலே மார்கழியின் சிறப்பு
தெரியாத, சிலரோ பீடை மாதம் என்று
சொல்வர்.தை மகளை வர வேற்க
தயாராகும் மார்கழியே நீ வாழியவே!




கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# மழலை முகம்

பௌர்ணமி போன்ற உன் முகத்திலும்
எட்டிப்பார்க்கும் உன் இரு பற்களிலும்
பஞ்சு போன்ற உன் கை விரல்களிலும்
புரியாத புதிராய் பேசும் உன் மழலை சொற்களிலும்
நான் தோற்றுவிட்டேன்.
மெய்சிலிர்த்து விட்டேன்.

உன் முகம் பார்த்தால்
பல நாள் துக்கங்கள்
ஒரு நொடியில் காணாமல் போகிறது.
நீ தட்டுத்தடுமாறி நடக்கும் அந்த நொடியில்
என்னுள்ளம் ஒருகணம் நின்று விடுகிறது.



உன்னை அள்ளி அணைத்து
உன் கன்னத்தில் என் விரல் மெல்ல தீண்டும்போது
சுளிக்கும் அந்த முகம் பார்ப்பதற்கு கொள்ளை அழகு.
பிரமாண்ட அழகு.



கவிஞர் நுஸ்ஹா ஆஸீம்,ஓட்டமாவடி

# தன்முனைக் கவிதை

## தனிமை



தகிதகிக்கும் உள்ளம்
தனிமையில் உணரும்
தவிப்புகள் புள்ளியாக
தன்சுடர் மிளிரும்!

## காதல்

இணையாத காதலின்
இனிக்காத முத்தம்
இனித்திடும் நினைக்கையில்
இல்லத்து அரசியோடு!

## உறவுகள்

வேசம் போட
சாயம் வெளுக்கும்
பாசம் காட்டி
காயம் ஆற்றும்!

## பிரிவு

என்னுடைய இதயம்
மீண்டும் கேட்கிறது
மரணமில்லாக் காதலை
மரணித்துச் சென்றவளிடம்!

## நினைவுகள்

பத்து வயதில்
பக்குவப்படாத முத்தங்கள்
மறக்க முடியாத
மகத்தான காவியம்!

## நட்பு

மோதலுண்டு அவ்வப்போது
சதியில்லை எங்களுக்குள்
வாடும்முகம் கண்டு
தேற்றிட நட்புண்டு!

கவிஞர் லா.பெனிஸ்,திருநெல்வேலி,திசையன்விளை

# கனவுகளைக் கலைக்காதே

கனவுகள் ஏக்கமாம்
கண்களில் தேக்கமாம்
விழிமூடி தூங்கவே
வழிமூடி நிற்குமாம்

ஊண் உறக்கம்
எல்லாம் மறக்குமாம்
உள்ளத்தின் உள்ளே
உத்வேகம் பிறக்குமாம்

முயற்சி பயிற்சி
முறையாக நடக்குமாம்
புகழ்ச்சிநிலை தப்பிவிட்டால்
மகிழ்ச்சிநிலை மறையுமாம்

விழிகளில் சுமந்த
விருப்பக் கனவுகள்
விழிநீராய் வழிந்தோட
வழியதனை வகுக்காதே

விழியதனுள் பத்திரமாய்
சிப்பிக்குள் முத்ததுபோல்
தேக்கிடுவாய் நாளும்
தேடலும் தொடரட்டும்

வற்றாத வெள்ளமதாய்
நிற்காமல் ஊற்றெடுக்கும்
சிப்பியின் முத்ததுபோல்
தப்பாமல் சித்திவரும்



தேசம் தாண்டி உனது புகழ்
நேசம் தூண்டி தேடி வரும்
காலமென்ற கடிகாரம்
நல்லநேரம் காட்டி நிற்கும்

கோலமது கனவதுபோல்
கோடிசுகம் பாடிடுமே

கவிஞர் பஸ்லா பர்ஸான், காத்தான்குடி (இலங்கை)

# ஏனிந்த முரண்?

வசப்படுத்தும் நினைவுகளில்
வாசமாகி நிற்கிறாய்

வாசல் வந்து நிற்கின்
வளை கழுத்தின்
கோலிக்குண்டு உருளலில்
மூச்சு தடுக்கிறாய்!

ஏனிந்த முரண்?
உன்னிலா! உன்னால் தன்னிலா!

உயிரோசை உலவிடும் படி
உனதோசை உறையும்படி
உன்மத்தம் ஏதோ பண்ணுது

மூக்குநுனி உரசிட வரும்
உற்சாக அலையே நில்!

முந்திக்கொண்டு முத்தள்ளிப்
போகலாமென முகாந்திரமோ.

இரு கரங்குவித்து அள்ளிப் பருகும்
நீரொத்தது போல்
கன்னம் தாங்குவாயென
கருவிழி நிறைத்து
காதலில் தளும்பியிருக்க.

ஞானக்கண் அறிந்திடும்
ஞானி யாவேனென
ஞாபகமறதியில்
சபத மேற்றாயோ!



கவிஞர் பா.ஜெயப்பிரபா,சென்னை 81

# சிலம்பொலி செல்லப்பனார்

நாமக்கல் மாவட்ட சிவியாம் பாளைய
சுப்பராயன் பழநியம்மாள் நன்மகனாய்ப் பத்தொன்பது
நூற்றினது இருபத்து ஒன்மதினில் டிசம்பரிலே
இருபத்து இரண்டாம்நாள் தோன்றியவர்!சிலம்பொலியார்!
செல்லப்பர்! கணிதத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்!
சொற்செல்வர்ரா பிசேதுவால் "வாய்த்தநல்சொல் ஆற்றலினார்"
என்றினிய பாராட்டை உற்றவரே! சிலம்பதனை
தமிழகத்தே பட்டிதொட்டி எங்கணுமே பரப்பியவர்!
சிவஞானப் பெருந்தகைபால் பற்றாளர்! பள்ளிதனில்
நற்றலைமை! சேலத்தில் மாவட்டக் கல்வித்துறை
அலுவலராய் தமிழ்பல்கலை பதிப்புத்துறை இயக்குநராய்
உலகத்து தமிழாராய்ச் சிநிறுவன இயக்கலதும்
ஏற்றிட்டே நற்றொண்டு தொய்வின்றித் தொடர்ந்தாரே!
தமிழகத்து மாவட்டம் அனைத்திலுமே தமிழ்வளர்ச்சித்
துறைகண்டார்! ஆட்சிச்சொல் அகராதி வாயிலாக
நற்றமிழின் கலைச்சொற்கள் அறிமுகத்தை ஆற்றினாரே!
பல்லாயிரம் நூல்கட்கு அணிந்துரைகள் ஈந்தது வும்
சங்கத்தமிழ் பாதொகுப்பு சுவடிகட்குத் தெளிவுரையும்
யாத்தாரே! சர்க்கரைநல் பந்தலிலே தேன்மாரியாய்
சொல்மழையைப் பொழிந்ததிறன் மிக்கவண்ணல்! சிலப்பதிகா
ரத்திற்கு அறக்கட்டளை அமைத்திட்ட அறிஞரிவர்!
இருபத்து நூற்றினது பத்தொன்பது ஆண்டதனில்
தொண்ணூற்று ஒன்றான ஆண்டளவு வாழ்ந்திருந்தார்!
தமிழினமும் தமிழ்மொழியும் உள்ளவரை தமிழகத்தே
தன்தொண்டால் வாழ்ந்திருப்பார்! தமிழநெஞ்சில் நிறைந்திருப்பார்!
ஆசானாய்த் தமிழதனை கற்பித்த பள்ளிதனில்
மாணவர்தம் இலக்கியத்து மன்றினுக்கு அன்னவரை
அழைத்ததனால் நற்றொடர்பு என்றனுக்கு வாய்த்ததுவே!
எளிமையும் புன்நகையும் இன்சொல்லும் ஒருநாளே
பழகினாலும் தலைநாள்போல் தொடர்கின்ற கேண்மையும்
கொண்டமைந்த பண்பாளா! நீணிலத்து மன்னுகவே!



**கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)**

# அந்தியும் தென்றலும்

அள்ளிக் கொள்ளும்
அவனழகில்
மனம் தத்தித் தாவுகையில்
இளஞ்சிவப்பில் இவள்
வசம் தொலையும்
கலகல தென்றல் சீண்டி
சிரித்திட

இதழ்சுழித்து திரும்பும்
மேகமோ மெல்லமாய்
தூறதொன்று

துளிப்போதுமா
விடாத தூறல் முத்தமா
அந்திக்குள் அலைமோதும்
பூங்காற்றே

சங்கமப் பொழுதில்
சத்தம் செய்யாதே
செவ்விழிப் பெண்ணின்
சிலிர்ப்பில்
தென்மேற்கின் எல்லையில்
செஞ்சாந்தின் கலவரம்

கரையோர நாணல்களும்
வெட்கக் குடையின் கீழ்
காற்றோடு கலந்தே
வெண்பூக்கள் உதிர்த்து
வளைந்தேன் நானும்
வானுலக வண்ணத்திலென



அந்தியை அகற்றி
ஆட்கொள்ளும் பேராசையில்
இருளின் நீளக்கையில்
இதழ்மடித்து தஞ்சம்

யார் வந்து தடுத்தாலும்
தவழும் தென்றல்
தொடர்வேன் நானென
மெல்லிடை வருடலில்
மேகமும் நாணத்தில் நனைந்து
அவனோடு இணைந்தது

இயற்கையின் பேரழகில்
இழையுதே எந்நேரமும்
புலப்படாத புதினமாய் தென்றல்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# கால நேரம்

காலநேரம் காத்திராத போக்கிலே மதிப்பு
காலத்தை அறிந்து நடப்பது சிறப்பு

கடந்தால் வராதது கடிகார நேரம்
காத்திருப்பது அறிந்து கூடாது வேகம்

தன்பாதையில் தானாய் செல்லும் முள்போலே
தனக்கான வழியில் செல்வதே நல்வாழ்வே




கவிஞர் தேவிஸ்ரீ கார்த்திக்,இராஜபாளையம்

# மனமாற்றம்

என் கால்களை
மிதித்துச் செல்கின்றன
அவளது கால்கள்

வருத்தம் தெரிவிக்காமல்
சென்றவளை
கனல் கண்களினால்
கண்ட போது

கட்டுக்குள் வந்தது
கடுங்கோபம்

பிறையொன்று
தரைத் தட்டுகிறதே
என்பதற்காகல்ல

கடந்து சென்றவளின்
கண்களில்

கருப்புக் கண்ணாடி
என்பதற்காக!



கவிஞர் அ.சேவியர்,கடலூர்

# மௌனம்

பெருமக்கள் வரியெல்லாம் வாராக்கடனாய்
பெருமுதலாளிக்குச் சென்றும் மௌனம்

பயிர்கள் பாழாகி விவசாயிகள்
பலியான மரணத்திலும் மௌனம்

பொள்ளாச்சி தளிர்களின் கதறல்களைப்
பார்த்தும் பதறாமல் மௌனம்

பாமரனுக்குப் படிப்பறிவு கிடைப்பது
பாழாகிப் போனாலும் மௌனம்

பணிசெய்யக் கையூட்டு பெறுவது
பிழையல்ல என்றானாலும் மௌனம்

பெண்ணியம் பேசிவிட்டு பெண்ணடிமை
புரிபவர்களைக் கண்டும் மௌனம்

பிணி தீர்க்கக் கொள்ளையடிக்கும்
பெருநிறுவனத்தைப் பார்த்தும் மௌனம்

பொழுதும் மயக்கி கெடுக்கும்
போலி ஆன்மீகவாதியைக் களையாமல் மௌனம்

பரமனைக் கூட குறுக்கு வழியில்
பணத்தால் தரிசிப்பதைக் கண்டும் மௌனம்

பச்சைத் தமிழன் எனக்கூறிக்கொண்டு
பைந்தமிழ் பெயரிலும்மில்லை என்றாலும் மௌனம்

பட்டினியில்லா பார் படைப்போம் எனக்கூறிப்
பட்டினிச்சாவை கண்டிக்காமல் மௌனம்

பணத்திற்காக வாக்கை விற்றுவிட்டு
பீழையடையும் மானுடம் கண்டும் மௌனம்

பாராள்பவர்கள் பதவிக்கு வந்தபின்
பாமரனை மறந்தும் மௌனம்

பகட்டுக்கு இலவசத்தைக் கொடுத்துப்
படிப்பும் மருத்துவமும் தராமலிருந்தும் மௌனம்

பரிசுத்தப் பாரதம் எனக்கூவிக்கொண்டு
பாரதத்தாயின் பங்குகளை விற்றும் மௌனம்

மனிதன் மனிதத்தை இழந்து ஊனம்
மனிதா மௌனத்தின் மௌனம் கலை
இக்கணம் இல்லையேல்
மனிதஇனம் இருக்கும்
மனிதம் இருக்காது



கவிஞர் பா.இராஜசேகர்,சிதம்பரம்

# அவளதிகாரம்



நான் எழுதுவேன் என்று

வள்ளுவர் தான் எழுதாது
விட்டுச்சென்ற அதிகாரம்.

"அவள்"(அ)திகாரம்!

கவிஞர் விக்னேஷ் கலியமூர்த்தி,தஞ்சை

# பணம்

தேவையான போது
கிடைக்கும் பணத்திற்கு
விலைமதிக்க முடியாது

தேவையில்லாத போது
கிடைக்கும் பணத்திற்கு
மதிப்பே கிடையாது



சேமித்து வைத்து
பெருமை கொள்வதை விட
கஷ்டப்பட்டு சம்பாதித்து
கட்டுப்பாட்டுடன்
செலவழிக்கும் போது
பணத்தின் அருமை புரியும்

செல்வந்தன் கையில் இருக்கும்
இலட்சங்களைவிட
ஏழையின் கையில் கிடைக்கும்
ஆயிரம் ரூபாவுக்கு
மதிப்பு அதிகம் தான்

பணக்காரன் அதனை
ஒரு நொடியில் செலவழிப்பான்

ஆனால் ஏழையோ
அதனை செலவழிக்க
ஆயிரம் தடவை யோசிப்பான்

கவிஞர் ஷெண்பகச் சோலையாள், ஆய்ஷ்

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே! முதலும் தமிழே!!

# பாரம்பரியம் காட்டும் அன்பு

ஒரு பெண்ணின் அழகு அவள்
கண்கள் மட்டும் அல்ல அவள்
கூந்தலும் கூறும் அன்னையின் அன்பும்
பராமரிப்பும் அதில் இரண்டர கலந்திருக்கும்
கேசம் கோத பல கதைகள்
கூற தாயும் மகளும் மனம்
விட்டுப் பேசும் தருணம் இது
எண்ணையும் எண்ணமும் கலந்து பூசி
கனவுகளோடு தன்னிலை பறிமாறிக் கொள்ளும்
நேரம் சுகமாய் மனதில் வாழும்
இந்திய பண்பாட்டை வெளிப்படுத்தும் காட்சியாக
வேறெங்கும் இல்லாத பிணைப்பு இது!



கவிஞர் எழிலி

# ஒருதலைக்காதல்

தன்முனைக்கவிதைகள்

கை விட்ட நீ
இன்னும் காதலோடு நான்
உலகுக்கு இது அசிங்கம்
எனக்கோ அது காவியம்

எப்படி நீயிருப்பாய்?
யூகிக்க முடியவில்லை
எப்படியும் என்னினைவிருக்கும்
ஊறிய நம்பிக்கை

காதலுக்கு கண்ணில்லை
கடலளவு நிஜம்தான்
என்னைப் பிடித்த உனக்கு
என் ஏழ்மை பிடிக்கவில்லை

ஒருதலைக் காதலர்
சங்கம் ஆரம்பித்தேன்
கோடியில் உறுப்பினர்கள்
பலலட்சம் மனைவியறியாமல்

பலருக்கு மயில் இறகு
எனக்கு காய்ந்த ரோசா
வாடாமல் அதே நோட்டில்
குட்டிப் போடுகிறது
உன்னினைவுகளை



ஒருதலைக் காதல் போதை
என் மட்டில் நல்லதே
யார் குடியும் கெடுக்காமல்
என்னைக் கவிஞனாய் வைத்திருக்கிறது

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி

# வியப்பிலாழ்த்தும் விசாலினி!

திருநெல்வேலியில் குமாரசாமி சேதுராகமாலிகா தம்பதிக்கு
இரண்டாயிரமாவது ஆண்டதனில் பிறந்தவர் விசாலினி!
பேசுவதற்கு சிறுவயதில் சிரமப்பட்டாள் இப்பெண்ணே!
பேசும்திறன், பெற்றவளின் ஊக்கத்தால் கைகூட
அகவை பதினொன்றில் உலக சாதனையை
ஓசையின்றி நிகழ்த்தியவள்! தனக்கொரு இணையதளத்தை
ஒரேநாளில் தானே வடிவமைத்த பெருமைக்குரியவர்!
பள்ளிப் படிப்பில் இருமுறை இரட்டை உயர்வு!
இளங்கலை பொறியியல் படிப்பை மூன்றே
ஆண்டுகளில் சிறப்புடன் முடித்த பெருமைக்குரியவள்!
கற்றோர் இவளின் திறன்கண்டு பாராட்ட
பெற்றோர் அடைந்தனர் பெருமகிழ்வை தம்மகளால்!
சாதிக்க வயதில்லை என்பதற்கு சான்றிவள்!
இருபதைந்திற்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளில்
இறுதியாண்டு மாணவர்கள், பேராசியர்கள், துறைத்தலைவருக்கு
கருத்தரங்கம் வாயிலாக கற்பித்தாள் இப்பெண்!
அப்போது அவளின் அகவை பதினொன்றே!
இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் நிர்வாகம்
சர்வதேச தலைமையகத்தில் கணினித்துறை சார்ந்த
வல்லுநர்கள் கூட்டத்தில் இரண்டு மணிநேரங்கள்
இவரின் உரைகேட்டு வியந்து பாராட்டினர்!
பல்வேறு நிற்வனங்கள், பலநாட்டு அறிஞர்கள்
இவளின் திறன்கண்டு பாராட்டி பட்டமளித்தன(ர்)!
நுண்ணறிவுத் திறனளவில் உலகளவில் முதலிடத்தை
பெண்ணிவள் பெற்றதானல் பெருமை தமிழ்மண்ணுக்கே!
பிரதமரின் பாராட்டைப் பெற்றதிலும் பெருமகிழ்வு!
பிறந்த ஊருக்கும், நாட்டிற்கும் பெருமைசேர்த்த
பெண்ணிவளைப் பாராட்டி, ஈடிலாப் புகழுடனே
நீடு வாழ்கவென வாழ்த்தி மகிழ்வோமே!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# திருநாவுக்கரசு

(பாகம் ஒன்று )

இரண்டு புராணங்கள் மட்டும் பேரை வைத்து ஆம்பித்தார்
இரண்டு பேர் மட்டுமே குருநாதர்
இரண்டுபேர் , திருநாவுக்கரசர் , மங்கையர்க்கரசி
"திருநாவுக்கரசு வளர் தொண்டின் நெறிவாழ..."
"மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்..."

சூலை நோயின் அவதி , தமக்கையால் குணமானார்
தலையாய சிவனை மறந்து எத்தனை எத்தனை ஆண்டுகள்
முறையான வாழ்க்கை முறை பிசகி ஓடியது என்ன?
சூலை நீங்க "கூற்றாயின" பதிகம் பாட திருநாவுக்கரசரானார்.

பல்லவன் கெட்டான் தருமசேனர் நிலை அறிந்தான்
சொல்லவொண்ணா கோபம், ஆணையிட்டான் மகேந்திர மன்னன்
சொல்லாமல் ஓடிய தருமசேனரை பிடித்துவா என்றான்
கொல்லாமல் விடுவானா இனி அவர் விதி அவன் கையில்

அமைச்சரும் சேனை வீரரும் நாவுக்கரசைத் தேடி வந்தனர்
"அமைதியாக வந்துவிடு எங்களோடு" அரசன் உத்திரவு
சிவநாமம் என் நாவில் மறந்து விட்டேன் என் குற்றமே
தமிழோடு இசை பாட மறந்தது விட்டேன் என் குற்றமே

பல்லவனும் அது கேட்டு வெகுண்டெழுந்து கர்ஜித்தான்
இல்லாத சைவ சமயத்தில் புகுந்தது என்ன?
நில்லாது இழுத்துச் சென்று நீற்றுஅறையில் இடப்புகன்றார்
பொல்லாத சுண்ணாம்புக் காலவாயில் இட்டு அடைத்தனர்



ஒர்எழுநாள் கழிந்ததன்பின் நீற்றுஅறைக்குச் சென்றார்கள்
யாரும் எதிர்பாரா வண்ணம் நமசிவாய மந்திரம் கேட்டனர்
காரிருண்ட அறையை நடுங்கும் கரத்தோடு திறந்தார்கள்
முறுவல் பூக்க  குன்றிமணி சேதாரம் இல்லாமல் இருந்தார்

அதிர்ச்சியும் ஆத்திரமும் மன்னன் முகத்தில் கொப்புளித்தது
அதிர்வின் அலைகள் தாங்கமுடியாமல் "கொண்டுவா நஞ்சு"
எதிர்பாராதது, கொடுத்த நஞ்சை அமுதமாக குடித்தார்
"உன் நாமம் என் நாவில் மறந்து அறியேன்" என்றார்

மன்னன் நாவுக்கரசரை விடுவதாக இல்லை. "என்ன செய்யலாம்?"
எண்ணமெல்லாம் அவரை  பழிவாங்கும் விதி தெரியாமல் நின்றான்
சொன்னபடி உயிர்த்தது எல்லாம் சமணத்தின் அதி மந்திரமே
திண்ணமாக நம்பினான் நடக்கும் மாயங்கள் அருகனின் மகிமையே

அடுத்து அவரைக் கல்லில் கட்டி கடலில் போட்டான்
எடுத்து நமச்சிவாய பதிகம் பாட கடலூரில் கல்லும் மிதந்தது
"கற்றுணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சிவாயவே"
"சேர்ந்துஅடை  கருங்கலே சிவிகை ஆயிட..."

*சிவிகை : பல்லக்கு .

கவிஞர் திருக்காமு

# சமூகக் கவிதை

அந்நிய தேசத்திற்கு
அகதியாய் இடம் பெயர்வு

என் வீடு
எனக்கில்லை இங்கே

வீழ்ந்தது இருப்பிடமாக.
வீணானதோ வாழ்க்கை!

உயிர்வாழும் நெருடலில்
உள்வாங்கும் மிடறுகள்

தொலைந்த உடைமைகள்
தொல்லையாகிப் போனதோ

இதயம் இன்னும்
இரத்தச் சிதரலில்

இரவுகளின் இருளின்
இல்லாத நிழலில்

பதைபதைப்பு பரிதவிப்பாய்
பாதுகாப்பின்றி பரிமாற

விண்ணின் தேவதை
விருப்பங்களை நிறைவேற்றிட

விரைந்தே வருவாள்
விளைந்தே தருவாளெனும்

தேடலில் கனவுகளை
தேவையின்றியே சுமந்தே

தன்னிலை மேன்மையாய்
தந்திரங்களின் தவணையில்

திசை தெரியாத
தேசத்தில் அகதியாய்.

அலைகளின் ஆரவாரமாக
அந்நியனாய் வாழ்ந்திட.



கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை

# ஹைக்கூ கவிதைகள்

1
இரவு நேரத்தில்
விழுந்து விட்டது
ஓடைநீரில் மதில்சுவர் பிம்பம்.

2
பறவைகளின் சப்தம்,
மேற்கில் ஒய்ந்துவிட்டது
அந்திபொழுது.

3
இரக்கமுள்ள முதலாளியிடம்,
பணத்தைக் கொடுத்துவிடுங்கள்
கறிக்கடையில் ஆடுகள்.

4
தொழிலாளியின் வாழ்க்கையை
காப்பாற்றித் தரமுடியவில்லை
பொதிசுமந்த கழுதை.



5
ஆற்றுவெள்ளத்தில்
விழுந்து விட்டது
மரத்தின் நிழல்!

கவிஞர் அ.செல்வராஜ்,க.நா.ஊர்,உடுமலைப்பேட்டை

# இராமலிங்க அடிகள்

## (கட்டுரை)

### முன்னுரை



திருவருட் பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் (அக்டோபர் 5, 1823 — சனவரி 30, 1874) ஓர் ஆன்மீகவாதி ஆவார். "எல்லா மதங்களிலும் உள்ள உண்மை ஒன்றே" என்பதை குறிக்கும் வண்ணம், இவர் தோற்றுவித்த மார்க்கத்திற்கு "சர்வ சமய சமரச சுத்த சன்மார்க்கம்" என்று பெயரிட்டார். சைவ சமயத்தில் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்த வள்ளலாரை பழமைவாதிகள் கடுமையாக எதிர்த்தனர். இவர் சாதிய பாகுபாடுகளை கடுமையாக சாடினார்.

1867-ல் கடலூர் மாவட்டம் வடலூரில் "சத்திய ஞான தர்ம சபை" என்ற சபையை நிறுவினார். இங்கு வரும் அனைவருக்கும் 3 வேளையும் உணவு இலவசமாக வழங்கப்பட்டது. இன்றளவும் வழங்கப்படுகிறது.

### பிறப்பு

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் இருந்து 10 மைல் தொலைவில் உள்ள மருதூரில் புரட்டாசி 19 (5 அக்டோபர் 1823) இல் கருணீகர் குலத்தில் பிறந்தவர். பெற்றோர் இராமையாபிள்ளை, சின்னம்மையார். இவரோடு சபாபதி, பரசுராமன், உண்ணாமுலை, சுந்தராம்பாள் ஆகிய நால்வரும் உடன்பிறந்தவர்கள். இராமலிங்கர் பிறந்த ஆறாம் மாதத்திலேயே தந்தையை இழந்தார். தாயார் குழந்தைகளோடு பொன்னேரி சென்று வாழ்ந்தார். பின்னர் சென்னையில் ஏழு கிணறு பகுதி 39, வீராசாமி பிள்ளை தெருவில் உள்ள வீட்டில் குடியேறினார்.

# இராமலிங்க அடிகள்
(கட்டுரை)

## கல்வி

இவரின் தமையனார் சிதம்பரம் சபாபதி பிள்ளை, தன் தம்பி இராமலிங்க சுவாமிகள் பெரிய அளவில் படிக்க வைத்து அவரை முன்னேற வைக்கவேண்டும் என்று விரும்பினார். ஆனால், இராமலிங்க சுவாமிகள் அவர்களுக்கோ கல்வியில் நாட்டம் செல்லவில்லை. ஆன்மிகத்தில் ஈடுபாடு காட்டினார். அவரை நல்வழிப்படுத்துவதற்காக, தன் குருநாதரான காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் கல்வி பயில அனுப்பி வைத்தார் சிதம்பரம் சபாபதி பிள்ளை.

## வள்ளலாரின் பன்முக ஆற்றல்கள்

- அருளாசிரியர்
- இதழாசிரியர்
- இறையன்பர்
- உரையாசிரியர்
- சமூக சீர்திருத்தவாதி
- சித்தமருத்துவர்
- சிறந்த சொற்பொழிவாளர்
- ஞானாசிரியர்
- தீர்க்கதரிசி
- நூலாசிரியர்
- பசிப் பிணி போக்கிய அருளாளர்
- பதிப்பாசிரியர்
- போதகாசிரியர்
- மொழி ஆய்வாளர் (தமிழ்)
- பண்பாளர்



# இராமலிங்க அடிகள்
## (கட்டுரை)

### சத்திய ஞான சபை

இராமலிங்க அடிகளால் நிறுவப்பட்ட சத்திய ஞான தர்ம சபையின் முக்கிய நுழைவாயில்,வடலூர்
எல்லா மதங்களிலும் உள்ள உண்மை ஒன்றே என்பதை குறிக்கும் வண்ணம் இவர் தோற்றுவித்த மார்கத்திற்கு சர்வ சமய சமரச சுத்த சன்மார்க்கம் என்று பெயரிட்டார். உண்மையான ஞானி என்பதால் சாதிய பாகுபாடுகளை சாடினார்




தன் வாழ்வின் பெரும்பகுதியைச் சென்னையில் கழித்த இவர், நவீன சமுதாயங்களின் பிரச்சினைகளை உணர்ந்திருந்தார். அனைத்துச் சமய நல்லிணக்கத்திற்காக சன்மார்க்க சங்கத்தை நிறுவினார். அறிவுநெறி விளங்க சிதம்பரம் அருகே உள்ள வடலூரில் சத்திய ஞானசபையை அமைத்தார். இத்தகு உயரிய நோக்கங்களுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்துப் பணியாற்றினார். 1867ஆம் ஆண்டில் மக்களின் பசித்துயர் போக்க சத்திய தரும சாலையையும் நிறுவினார்.

### வள்ளலார் பதிப்பித்தவை

- சின்மய தீபிகை
- ஒழிவிலொடுக்கம்
- தொண்டைமண்டல சதகம்

### இயற்றிய உரைநடை

- மனுமுறைகண்ட வாசகம்
- ஜீவகாருண்ய ஒழுக்கம்

# இராமலிங்க அடிகள்

## (கட்டுரை)

### திருவருட்பா




இவர் பாடிய ஆறாயிரம் பாடல்களின் திரட்டு, திருவருட்பா என்று அழைக்கப்படுகிறது. இது ஆறு திருமுறைகளாக பகுக்கப்பட்டு உள்ளது. திருவருட்பா, முதலில் இராமலிங்கஅடிகளின் தலைமைச் சீடர் தொழுவூர் வேலாயுதனாரால் நான்கு திருமுறைகளாக வெளியிடப்பட்டன. பின்னர் ஐந்தாம், ஆறாம் திருமுறைகள் வெளியிடப்பட்டன. முன்னாள் தமிழக அறநிலையத்துறை ஆணையாளர் பாலகிருஷ்ணன், இராமலிங்கரின் உரைநடை, கடிதங்கள் முதலியவற்றைத் தனி நூலாகத் தொகுத்து வெளியிட்டார். பின்னர் ஊரன் அடிகளும் காலமுறைப் பதிப்பு வெளியிட்டுள்ளார்.

அருள் விளக்க மாலைப் பாடல் (4174)
நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதம் எலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார்
இலைநீ விழித்திதுப்பார் என்றெனக்கு விளம்பியசற் குருவே

### நினைவு அஞ்சல்தலை

இந்திய அரசு இவரது சேவையை கருத்தில் கொண்டு 2007 ஆகத்து 17இல் அஞ்சல் தலை வெளியிட்டு சிறப்பித்தது.

அ.வில்சன்,இதழாசிரியர்


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
உதிர்ந்த பூக்களுக்காக
கண்ணீர் விடாதீர்கள்..
மலர்கின்ற பூக்களுக்கு
தண்ணீர் விடுங்கள்..
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com
Aagaramuthalaa

aagaramuthala@gmail.com